**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM**

| | | | |
|---|---|---|---|
| D.W.1 | பெயர் : நவநீதன்<br>த/பெ : | OS.No. 38/2023 | 04.02.2026 |

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, வாதி தரப்பில் பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் தற்சமயம் சவுக்கியபுரம் பள்ளியில் தலைமையாசிரியராக பணிபுரிந்து வருகிறேன். வாதி துத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தாலுகா, நடுவக்குறிச்சி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமையாசிரியராக கடந்த 2008லிருந்து பின்னர் சமூகரெங்கபுரத்தில் உள்ள ஆசிரியிர் பயிற்சி நிறுவனத்தில் படித்து முடித்து பின்னர் ஆசிரியர் தேர்வு வாரியம் போர்டு வழியாக தேர்வு செய்யப்பட்டு அதற்கு பின்னர் தொடர்ச்சியாக பணியில் இருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு தமிழ் நன்றாக எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியும். வாதிக்கும் எனக்குமிடையே இந்த ஆசிரியர் நிறுவனங்களில் இருக்கையில் ஏதேனும் பிரச்சனைகள் இருந்து வந்ததா என்றால் இல்லை.

வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் குறியீடு செய்யும்போது நானோ எனது வழக்கறிஞரோ ஏதேனும் ஆட்சேபணைகள் தெரிவித்தோமென்று சொன்னால் இல்லை. வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன் அடிப்படையில் நான் விசாரணைக்கு சென்றேனா என்றால் சென்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதன் அ.சா.ஆ.1ன் ஒரு பகுதியாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட மனு ரசீதிற்கு ஆட்சேபணை தெரிவித்து அதே காவல் நிலையத்திலோ அல்லது உயர் அதிகாரிகளிடமோ ஆட்சேபணை தெரிவித்தேனா என்றால் இல்லை. வாதி கொடுத்த புகாரில் உண்மை தன்மை இருப்பதால் தான் நான் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.


SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2026.02.04 17:34:15 +0530

என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள புகைப்படத்தில் இடம் பெற்றுள்ள வாசகம் உண்மைதானா என்றால் அதைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் பிளக்ஸ் போர்டு வைத்ததை பார்த்திருந்தேனா என்றால் பார்க்கவில்லை. இந்த பிளக்ஸ் போர்டு இந்த இடத்தில் நாங்கள் வைக்கவில்லை என்று சொல்லி காவல் நிலையத்திலோ, காவல் கண்காணிப்பாளரிடமோ நான் புகார் அளித்தேனா என்றால், பிளக்ஸ் போர்டுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்பதால் புகார் அளிக்கவில்லை. வாதி என் மீது புகார் கொடுத்ததற்கு நான் அவர் மீது ஏதேனும் புகார் அளித்தேனா என்றால் இல்லை. வாதியின் நற்பெயரை கெடுக்க வேண்டுமென்பதற்காகவே வழக்கின் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிளக்ஸ் போர்டை வைத்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.1 ஆவணத்தில் என்னுடைய பெயரின் கீழ் மாநில செயற்குழு உறுப்பினரும் மற்றும் 1வது பிரதிவாதியின் கீழ் மாவட்ட பொருளாளர் என்றும், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் கண்டுள்ளது போல் என்னுடைய எதிர்வழக்குரையில் 2வது பத்தியில் 4வது பாராவில் மற்றும், என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 3 வது பக்கத்தில் 4 வது பாராவில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையாகுமென்று கூறியுள்ளேன் என்று சொன்னால் அந்த சமயத்தில் நாங்கள் மேற்படி பதவிதான் வகித்து வந்தோம்.என்னுடைய எதிர்வழக்குரையில் பத்தாவது பத்தி மற்றும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பத்தாவது பத்தியில் நான் கூறி இருப்பது போல் வாதி எங்கள் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் எங்கள் பெயரை விளம்பர பதாகையில் அச்சிட்டு, வாதியே விளம்பர பதாகையை அந்த இடத்தில் வைத்து விட்டு எங்கள் மீது வீண் புகார் கூறி வருகிறாரா என்று நான் கூறியுள்ளேனா என்று சொன்னால் சரிதான். இது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதலமைச்சரின் புகைப்படத்தை அச்சடிக்கப்பட்டது மற்றும் கல்வித்துறை அமைச்சர் புகைப்படத்தை அச்சடிக்கப்பட்ட விவரத்தை நானோ, 1ம் பிரதிவாதியோ முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. நான் எந்த கட்சிக்கும் உறுப்பினராக இருந்தேனா என்றால் இல்லை. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2026.02.04 17:34:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.